Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்

வீடுபேறநில்.

வெண்டாமரை க.	1913-ம் ஆ பிப்ரவரி மீ	இசழ் உ.

பத்திராதிபர் : — சி. பங்காருப் பத்தர்

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

நவ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
பாற் கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Sinnaya Press, Pondicherry.

22

உள்ளுறை.

பக்கம்.

நமது தமிழ் : — பத்திராதிபர். 1

சரீரப்பயிற்சி:–ஸ்ரீமத் சுவாமிநாததீக்ஷிதர் B.A.L.T., கலோனியல் காலேஜ் ப்ரொபஸர், புதுவை. 6

பால சிக்ஷை:– ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 7

பயம் : — ஸ்ரீமத் தம்பி புருஷோத்தமப் பிள்ளை, கல்வே காலேஜ் ஹெட் மாஸ்டர், புதுவை. 10

புதுவையும், கலைமகளும் : — இதோபதேசி. ... 12

மணிமேகலை : — பத்திராதிபர். 14

மயிலச் சிலேடை வெண்பா : — ஸ்ரீமத் வித்வான் பு. அ. பெரியசாமிப் பிள்ளை. 16

பொருளிலக்கணம் :— ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர். 18

மங்கலம் : — வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். 19

நியாயமாலா : — ஸ்ரீமத் வா. மாசிலாமணி முதலியார், பென்ஷன் சப் இஞ்சினீர், காஞ்சீபுரம் 20

சுஜன சம்வாதம் (ஒரு நல்ல கப்பல்): — ஸ்ரீமத் செங்கல்வராய முதலியார், காஞ்சீபுரம். 22

சுபோத ரத்நாகரம் (ஒரு நற்புதல்வன்) ஸ்ரீமத் செங்கல்வராய முதலியார், காஞ்சீபுரம். 23

சமாசாரக் குறிப்புகள். 24

☞ இப்பத்திரிகை 1912-ம் ஆ டிசம்பர் மீ 2-ம் கூடிய மாட்சிமைதங்கிய பிரஞ்சிந்தியா கவர்னர் துரையவர்கள் தலியூலோசனைச் சங்கத்தில் அங்கிகாரம் செய்யப்பெற்றது.

அறிவு விருத்தியாவதற்கு ஏதுவாகும். மஞ்சத்திற் கிடக்குங் குழந்தை கண்ணெதிரில் தீபம் வைத்தல், பலவர்ண மணியினுலுங் துணியினுலுஞ் செய்த பந்து கிளி முதலிய பொருட்களைத் தொங்கவிடுதல், தாய்மார்கள் அநுசரிக்கும் உத்தம வழக்கங்களி லொன்றாகும். பளபளப்பானதும் பலவர்ணமுள்ளதுமான வஸ்துக்கள் குழந்தைகளின் பார்வையைக் கிரகிக் கின்றன. இவ்வித காட்சியினுலேற்படும் புலனுகர்ச்சி, ரூபம் வர்ணம் பருமன் முதலியவற்றின் பேதாபேதத்தை விளக்கிப் பகுத்தறிவை வளர்க்கும். சிசுக்களின் முன்னர்த் திருத்தமாக வார்த்தையாடுவதினுலும் பற்பல வாத்தியம் வாசிப்பதினுலும் இனிய குரலால் பாடுவதினுலுஞ் செவிப்புலன் விருத்தியாகும். சில குடும்பங்களில் பரம்பரையாகச் சங்கீத ஞானம் ஏற்பட்டிருப்பது சிசுப் பருவத்தினின்றே இனிய ராகத்தைக் கேட்கும் பழக்கத்தினுலன்றே? மதலைமொழிகளாகிய குற்றச் சொற் களைப் பின்னும் பின்னுங் குழந்தைகட்கு எடுத்துக் கூறுவதைத் தவிர்த்து, முதலிலிருந்தே திருத்தமான வார்த்தைகளைப் போதித்து வரவேண்டும்.

குழந்தையின் புத்தி யாதாமொரு விஷயத்தில் சென்றிருக்கும் போது அக் கவனத்தை வேறு விஷயத்தில் இழுப்பது தவறு. கவன பங்கம் அறிவு விருத்திக்குப் பாம சத்துருவென்பது யாவராலும் அறியக் கிடக்குஞ் சாமான்ய வுண்மை.

அமைதியே சிசுக்களின் அறிவை வளர்க்குஞ் செவிலித்தாய். அமைதியாகவுந் தேகாரோக்கியத்தோடும் இருக்கும் குழவி அழாது. எனெனின், அழுகையே ஓர் உபத்திரவம். இத்துன்பத்தைச் சிசு அகாரண மாய் எதற்காகத் தேடிக்கொள்ளும்? அஜாக்கிரதையினுலோ ஆராய்ச்சிக் குறைவினுலோ சரியான காரணங்களைக் கண்டறியாத தாயர் சும்மா அல்லது அடந்தினுல் பிள்ளை அழுகிறதென்றெண்ணி வேண்டிய பரிகா ரஞ் செய்யத் தவறிப்போகின்றனர்.

குழந்தைகளை அமைதியாக வைப்பதினுல் தங்கட் கேற்படுஞ் சொற்ப சிரமத்திற் கஞ்சிப் பயப்படுத்தியும், தொட்டில் ஊஞ்ஞ முதலிய வைகளில் கிடத்திக் குலுக்கி அலட்டியும் அதனுலுண்டாகும் மயக்கத் தினுல் உறங்கச் செய்கின்றனர். இவ்வித தீர்வழக்கத்தினுல் சிசுவின் மெல்லிய புத்திக்கு ஏற்படும் பலவீனத்தை நாம் சொல்லாமலே எவரும் ஊகித்தறியலாம். இவ்விதமாக உறங்கச் செய்தல் லாகிரி வஸ்துக்களைக் கொடுத்து ஒருவரை நெம்மதிப்படுத்துவதை யொக்குமன்றே?

இவ்வயதின் சிகூயைச் சுருக்கிக் கூறவேண்டுமாயின், குழந்தைகளைச் சாந்தமாகவும் அன்பாகவும் பாதுகாத்து, இந்திரிய சக்தியைப் பலவாற்றலும் விருத்திசெய்து, புலனுகர்ச்சியால் கவரப்பட்ட குழந்தையின் புத்தி ஒரு விஷயத்திற் சென்றிருக்கும்போது, அதனல் அக்குழந்தையின் மனதில் உண்டாகிற ஏதோ ஒரெண்ணம் சரியான உருவத்தையடைந்து பிரதிபலிப்பதற்கு, அதன் கவனத்தை வேறெரு விஷயத்தில் இழுக்காமல் அமைதியாக வைத்திருப்பதே முக்கியம் என்பாம்.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

பயம்.

(தொடர்ச்சி)

இம் மலர்தலை யுலகில் மானிடர்கள் நோய்க்தம் மரணத்திற்கும் கருதலாம்படியதன்றிக் கலங்கி நடுங்குகின்றனர். பிணியுறுதற்கும் விளிதற்கும் அஞ்சுதல் அறிவுடைமையோ பேதைமையோ என்பதைச் சற்று விசாரிப்பாம்.

பிணியற்ற யாக்கையின் துணை சதுர்வித புருஷார்த்தங்களையடைதற்கு இன்றியமையாத தென்பது நிண்ணம். அதற்கேற்பவே " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் " என்றூர் ஆன்றோர். பிணிகளோ பழவினையாலும் தம்மாலேற்படும் காரணங்களாலும் மக்கட்கு வருவனவென்பது அறிஞர் வழக்கு. நோய் வந்தபின் அதற்கு வெருவி வாளா சஞ்சலப்படுவதற்கு மாருக, அது வருமுன் தடுப்பதன்றே மூதறிவு.

" மிகினும் குறையினு நோய்செய்யு தூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று "

(திருக்குறள்.)

நாம் உடற்குச் செய்வனவற்றைக் குறைபடச் செய்வதினலும் மிகைபடச் செய்வதினலும் வாதமுதலா ஆயுள்வேதியர் வகுத்த மூன்று நோயும் நம்மைத் துன்புறுத்தும். மக்கட்கு எற்பட்டுள்ள நானவித ரோகங்களும் விலங்கினங்களிடம் காணப்படாமைக்குக் காரணம், நம்மைப் போல் அவை அகம்பாவத்தினலும் மனே விகாரத்தினலும் உடற்குப் பலவாற்றலும் பழிசெய்யாமையேயாம்.

நாம் நம்முடற்குச் செய்யும் சிறுசிறு குற்றங்களும் இறுதியில் ஒருங்குசேர்ந்து பெரும் பெரும் பிணிகட்கு ஏதுவாகின்றன. ஆயுர்வேத பண்டிதர் நமதுடலே என்றும் மறவாத என்றுந் தவறுத கணக்கனென்று கூறுவர். அதெங்ஙனமெனின், ஒருவன் தன் உடற்கு இளமையிற்செய்த பழி மூப்பது நாற்பது வருடங்கட்குமேலும் முற்றும் மறைந்து கிடந்து வயோதிகத்தில் அவனை வாட்டும்.

" அல்லித்தா ளற்றபோது மறுதனூ லதனைப்போலத்
தொல்லுடம்பு நீங்கத்தீவினை தொடர்ந்துநீங்கா "
(சீவகசிந்தாமணி.)

என்ற உறுதிமொழி பிணிக்கும் பொருந்தும். ஒருவன் தன் உடற்குச் செய்த பழி உயிர் நீங்கினும் அவன் பின்னுரைத் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பாதிக்கும். ஆதலின் " நோய்க்கிடங்கொடேல் " என்னும் முதுமொழியை எஞ்ஞான்றும் சிரமேற்கொண்டவர்களாய் ஆயுர் வேத விதிகளையும் சுகாதார முறைகளையும் தாழ்வர அநுசரித்தலே நமது முக்கிய கடமை. இக் கடமையை யியற்றாது நோய்க் கிடங்கொடுத்து அது வந்தபின் வருந்தி யாழலதாலாய பயனென்னை? பிணிக்குப் பயந்து பிழைத்தாரெவர்? புலி கொல்லுவதற்குமுன் கிலி கொல்லுமென்பதற் கேற்ப, அச்சமே நோயை வாவென்றழைத்து வளர்க்குமன்றே?

" இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர் "
(திருக்குறள்)

நோய்க்குப் பயப்படாதவர்க்கே நோய் பயப்படுமென்க.

மானிடர்கள் மரணத்திற்கு மனங்கலங்குதல் மதியீனமாகும். எனெனின், வருவதாகிய ஒரு துன்பத்திற்கு நாம் அஞ்சியலைதற்குக் காரணம், அத் துன்பத்தை யநுபவித்துத் தீரவேண்டுமென்ற அச்சமன்றே? இறத்தலைத் துன்பமாகக் கொள்ளினும், இறந்தபின் துன்பமேது? இத் துன்பத்தை ஒருபோதும் உணரோமென்னும் உண்மை யுறுதியுள்ள நாம் அதற்கு அஞ்சுவது புல்லறிவன்றே?

" உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "
(திருக்குறள்.)

என்னும் வேத விழுப்பொருளையும் உற்றுணர்ந்தோமில்லை. நிற்க, பிறந்தனவெல்லாம் இறந்தே தீரும். மரணத்திற்கு மருந்துயில்லை மந்திரமு

மில்லை என்னும் உண்மை நம்மனதின் கண் குன்றின்மீது வைத்த தீபம் போல விளங்கா நிற்க, விளிதற்கு வெருவுதல் வெள்ளறிவேயாகும். நம் மால் தடுக்கற்பாலதாகிய கெடுதிக்கன்றே அஞ்சி அதை விலக்குவதற்குத் தாழாது முயலவேண்டும். யாக்கையின் நிலைமையோ, நேற்றிருந்தான் இன்றிறந்தான் என்பதற்கன்று, நேற்றிருந்தான் இன்றுமுளன் என்ப தற்கே வியப்பைப்பயக்கும் திறத்தது.

நினைப்பிலுல் பெரியோராயும் கலைக்கடல் கடந்தோர்ராயுமுளரும் இந்நீதிகளனைத்தும் அறிந்தும் அறியார்போலத் துஞ்சுதற்கஞ்சிநிற்றல், நம்மைச் சூழ்ந்துவாட்டும் மாயை அவர்களின் இருகண்ணும் புதைத்து வைப்பதினுலென்க.

செல்கதி எக்கதியாகுமோ என்னும் மனக்கவலையே சாவின்மாட் டுப் பெரும்பான்மையோர்க்குக் கழிபெரும் பயத்தை மூட்டுவது. சாதற் கஞ்சுவதினுல் செல்கதி நல்கதியாகுமோ ? " பசியாமைக்கு மருந்து தரு கிறேன் ஒருபிடி யன்னம் தா " என்பதற்கொப்ப, உனக்கு மோட்சத் தைத் திறப்பேன் எனக்குக் குட்சியை நிரப்பு என நம்மை மயக்குவோர் களின் மந்திரத்தினுலும் தந்திரத்தினுலும் நற்கதி கிடைக்குமோ ?

பழிக்கஞ்சி எவ்வுயிரையும் தம்முயிர்போலோம்பிக் கம்பமில் நெஞ் சராய் அறத்தையே புணையாகப்பற்றிப் பிறவிப் பெருங்கடலை நீந்தினவர்க் கன்றே அது சித்திக்கும். அன்னோர் இத்தோன்மலியாக்கையைத் துறத்தலே துறக்கத்திற்கு மெய்வழியெனத் தேர்ந்து மரணத்தின் வரு கைக்கு மனமகிழ்வுடன் எதிர்நோக்கி நிற்பர்.

(இன்னும் வரும்)

தம்பி புருஷோத்தமன்.

புதுவையும், கலைமகளும்.

புதுவை என்னும் நகரமானது இந்தியாவிலுள்ள பிரஞ்சுக்கார ருடைய பிரதான பட்டினம். இதில் மூன்று பல தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றி மறைந்தமை வெளிப்படை. காரணம், அவைகள் 'பொலித்திக்' என்னும் இராஜதந்திர மொன்றனையே தம் கருத்தாகக் கொண்டிருந்தி மையே யாம்.

பகவத்கீதா சன்மார்க்க சபையாரால் பிரசுரிக்கப்பட்டுவந்த சன் மார்க்கபோதினியும், வித்தியாபிவிருத்தி சபையாரால் பிரசுரிக்கப்பட்ட

வித்யாபிவர்த்தனியும் இராஜதந்திர விஷயத்தை மேற்கொண்டிராதிருந்தும் அவையும் நடைபெறுமலே போயின. இதற்குக் காரணம் புதுவை மகா ஜனங்கள் அப்பத்திரிகைகளை ஆதரியாமையே.

ஒரு நகரத்தை யலங்கரிப்பதில் சபைகளும், பத்திரிகைகளும் முக்கிய சாதனங்களென்பதை இக்காலத்தி லறியாதார் சிலரே. அன்றியும் பயனுறுத்துவதும் சபைகளும் பத்திரிகைகளுமே யென்பதும் மறுக்கற் பாலதன்று.

பத்திராசிரியரும், பத்திரிகைக்கு விஷயதானம் புரிவோரும் மகா ஜனங்களின் நோக்கத்தைப் பெரிதும் ஆலோசித்துத் தாம் சொல்வது நன்னெறியே யாயினும் எப்படி யெப்படி அதை வெளியிடின் மகா ஜனங்க ளியாவர்க்குந் திருப்திகரமாயிருக்கும்; அவ்வழி யவர்க ளொழுகிப் பயனுறுவார்கள் என்பதாகத் தம் மூளையுருக எண்ணி யெண்ணி யெழுதவேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இதை நாம் சற்று யோசிப்போமாயின் அன்னர் கைம்மாறு கருதாது செய்யும் பேருபகாரத்திற்கு நாம் செலுத்துஞ் சந்தாத் தொகை எத்துணையுஞ் சாலாவென்பதை யாம் அறியாதிரோம்.

ஆயின் அன்னர்க்கியாம் செய்யும் உதவிதா னியாதோவெனின், அவர்க ளெழுதுவதைக் கவனித்து அவ்வழி யொழுக முயல்வதொன்றே யாம்.

இதனைப் புதுவை வாசிகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவர்கள். ஏனெனில்,

சிறுசிறு கிராமங்களிலுங் காணப்படும் "ரீடிங்க் ரூம்" என்னும் வாசக சாலையானது இப்புதுவையில் மிக அருகிக் காணப்படுகின்றமையால்தான். இப்பெரிய நகரம் எத்தனையோ ரீடிங்க் ரூம்களிருந்து பயன்தரவேண்டிய நிலைமையிலிருக்கின்றது. ரீடிங்க் ரூம்கள் தெருக்கள் தோறுந் தாபிக்கப்பெறின் பத்திரிகாபிமானம் பெரிதும் வளரும். அது வளரப் பத்திரிகாதிபர்க்கு அதனு லேற்படும் பொருள் நஷ்டம்வராது. அது வராதாக, பத்திரிகா பிரகடனம் செவ்வனே நடைபெறும். அது நடைபெற ஒற்றுமை முதலிய நன்னெறிபாவும். அது பரவ, துன்ப நிவிர்த்தியும், இருமைச் சுகங்களும் எளிதிலடையப்படும். இஃதே யாவ ராணும் விரும்புந் தகைமைத்து; ஆகலின் சர்வ துக்க நிவிர்த்தியையும், மேலாம் இன்பத்தையும் பெற விரும்பும் ஒவ்வொருவரானும் ஆதரிக்கற் பாலது பத்திரிகாபி விருத்தியே யென்பது சொல்லாமலே விளங்குதின்

றது. ஆகலின் இப்போது நம் பெருஞ் செல்வமாய், இயற்கையாய் அழகுடையாயேனும், சிவஞானப் பெருஞ் செல்வர்களால் அளிக்கப்பட்ட வியாசாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாய் வெளிவந்த இக்கலை மகளையேனும் புதுவை வாசிகள் நன்கு ஆதரித்துச் சுகமுறப் பிரார்த்திக்கின்றேன்.

இதோபதேசி.

இலக்கியப் பகுதி.

மணிமேகலை.

ஆபுத்திரன் நிறமறிவித்த காதை.

(பதின்மூன்றுவது மணிமேகலைக்கு அறவணர் ஆபுத்திரன் நிறங்கூறிய பாட்டு.)

1-10. மாபெரும் பாத்திர மடக்கொடிக் கருளிய
வாபுத் திரன்றிற மணியிழை கேளாய்
வார ஞசியோர் மறையோம் பாள
ரரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்
குன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியவிடை
யீன்ற குழவிக் கிரங்கா ளாகித்
தோன்றுத் துடவையி னிட்டன ளீங்க

இ-ள். அறவண வடிகள் மணிமேகலையை நோக்கி, அணியிழாய்! அமுத சுரபியென்னும் பெயரிய பிக்ஷா பாத்திரத்தை நினக்களித்த ஆபுத்திரன் வரலாற்றைக் கூறுவேன்; கேட்பாயாக; காசியம்பதியில் வேதம் ஓதுவிப்பவனாகிய அபஞ்சிகனென்னும் அந்தணன் மனைவி சாலி யென்பாள் நியமந்தப்பிக் கணவனுக்குப் பிழை செய்தமையா லுண்டாகுஞ் சிக்ஷைக்குப் பயந்து, அப்பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத் தெற்கின்கணுள்ள கன்னியாகுமரிக்கு நீராடச் சென்றனள்; சென்ற வள் பூரண கர்ப்பிணியாதலின் செறிந்த இருளில் சூலால் வருந்தி வழி

யிடையே பெற்ற குழந்தையினிடத்து இரக்கமில்லாளாகி, அக்குழந்தை யை ஒரு தோட்டத்திலிட்டு நீங்கினள்.

11–24. தாயிறு வாக்குழ லித்துயர் கேட்டோ
ராவந் தணைந்தாங் கதன்றுயர் தீர
நாவா னக்கி நன்பா லூட்டிப்
போகா தெழுநாட் புறங்காத் தோம்ப
வயனங் கோட்டிலோர் மறையோம் பாள
னியவிடை வருவோ னிளம்பூ தியென்போன்
குழவி யேங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீ ருகுத்தாங்
காமக னல்ல னென்மக னென்றே
காதலி தன்னொடு கைதொழு தெடுத்து
நம்பி பிறந்தான் பொலிகநங் கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடுங் கூடி
மார்பிடை முந்நூல் வனையா முன்னர்
நாவிடை நன்னூ னன்கன நலிற்றி

இ-ள். தாய் நீங்கவே அக்குழந்தை உணவுபெறாது வருந்தி யழுத தைக் கேட்டு ஓர் பசுவானது வந்து அக்குழந்தையின் வருத்தந்தீர நாவால் நக்கிப் பாலூட்டி ஏழுநாள் வரையும் அப்புறஞ் செல்லாது பாதுகாத்துக் கொண்டிருக்க, வயனங்கோடு என்னும் ஊரிலுள்ளவனுகிய பூதியென் னும் அந்தண னொருவன் தன் மனைவியோடு அவ்வழியே வருபவன், அக்குழந்தை யழுத கூக்குரலைக் கேட்டுச் சென்று தனியே கிடக்கும் அதனைக் கண்டு மிக்க துன்பத்தோடு கண்ணீர் சொரிந்து, " இவன் பசுமகனல்லன்; என் மகனே " என்று கூறி, மனைவியுந் தானும் அக் குழந்தையைத் தமக்குத் தந்தது தெய்வமென் றெண்ணி அத்தெய்வத் திற்கு அஞ்சலிசெய்து அக்குழந்தையை யெடுத்து, மகன் பிறந்தான் நமது குலம் தழைகவென்று தமதூர்க்குச் சென்று வீடடைந்து மகிழ்ச்சி யொடு வளர்த்து, மார்பிடத்தே பூணுநூல் தரிப்பதற்கு முன்னர் (மிகு விரைவில் என்றபடி) வேதவேதாங்கங்களை நன்றாகக் கற்பித்தனன்.

25–39. ஒத்தடை யந்தணர்க் கொப்பவை யெல்லா
நாத்தொலை வின்றி நன்கன மறிந்தபி
னப்பகி தன்னுளோ ரந்தணன் மனைவயிற்
புக்கோ னுங்குப் புலைசூழ் வேள்வியிற்
குரூஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி

வெரூஉப்பகை யஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்றுங்
சுஞ்சிறின் றழைக்கு மாதுயர் கண்டு
நெஞ்சு நடுக்குற்று நெடுங்கணீ ருகுத்துக்
கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட
நள்ளிருட் கொண்டு நடக்குவ னென்னு
மூள்ளங் கரந்தாங் கொருபுடை யொதுங்கி
யல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன்
கல்லத ரத்தங் கடவா நின்றுழி

இ-ள். ஆபுத்திரன் வேதமோதும் அந்தணர்க்குரியவை யனைத்தும் காமெலித லின்றி (சொல்வன்மை குறையாம லென்றபடி) நன்கு அறிந்த பின்னர், அவ்வூரில் ஓர் அந்தணன் வீட்டிற் புகுந்தவன், ஆங்கு அசுத்தமாகிய ஊன்றின்றலைக் கருதுகின்ற யாகசாலையில், பூமாலை கொம்பின்கண்ணே சுற்றப்பட்டு, தனக்கு நேர்ந்த பகைக்குப் பயந்து பெருமூச்சுவிட்டு வருத்தமுற்று, கொலைத் தொழிலையுடைய வேடுவர் வில்லுக்குப் பயந்து வலையி லகப்பட்ட மானேபோல அஞ்சிக் கூப்பிடுகின்ற பசுவின் துயரத்தைக் கண்டு மனம் நடுக்குற்று மழைக்கணீர் பெருக்கி, பசுவினது மரணத் துன்பம் நீங்குமாறு, செறிந்த இருளில் இவர்க ளறியாவண்ணம் இதனைக்கொண்டு செல்வேன் என்று நினைத்து அவ்வெண்ணத்தை வெளிப்படுத்தாமல் ஒருபக்கத்தி லொதுங்கியிருந்து, அன்றிரவில் அப்பசுவைக் கைப்பற்றிக்கொண்டு அவ்வூரைவிட் டகன்று பருக்கைக் கற்கள் பொருந்திய நெருங்கிய சிறிய வழியிற் செல்லாநின்றனன்.

பத்திராதிபர்.

மயிலச் சிலேடை வெண்பா

மூலமும் உரையும்.

அவையடக்கம்.

தேடு மயிலச் சிலேடைவெண்பாச் செவ்வேளே
பாடுவித்தா னன்றிப் பகர்வேலே - கூடுமிம்மெய்
தேர்ந்தார்தன் கோராச் சிதடர் குறைகூற
னேர்ந்த வியல்பே நினைந்து.

(இ-ள்.) தேடும் - யாவருந் தேடிச் செல்லும், மயிலம் - மயில மலையின்மீது, சிலேடை வெண்பா - சிலேடை வெண்பாவை, செவ்வே ளே - ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளே, பாடுவித்தான் - அடியேனைப் பாடும் படி செய்வித்தார், அன்றி - அக் கடவுள் அப்படிச் செய்யாமற் போவா ரேயாகில், பகர்வேனே - அடியேனுற் பாடமுடியுமோ; முடியாது, கூடும் - சேர்ந்த, இம் மெய் - இந்த உண்மையை, நன்கு - நன்றாக, ஓரா ஆராய்ந்தறியாத, சிதடர் - மூடர்கள், நினைந்து - கருதி, குறைகூறல் - குற் றங் கூறுதல், நேர்ந்த - (அம்மூடர்களுக்குச்) சம்பவித்த, இயல்பே - குண மே, தேர்ந்தார் - ஆராய்ந்தறிந்தவர்கள், நினைந்து - கருதி, குறைகூறல் - குற் றஞ் சொல்லுதல், நேர்ந்த - (அந்தமூடர்களுக்கு) உடன்பட்ட, இயல் பே - குணமாகுமா; ஆகாது, எ-று.

நான் பகர்வேனே வென்று சொல்லி யிருக்கவே, குற்றமுண்டா யினும் கூறுவென்பது தோன்ற இயல்பே என்று வினவினும், எமது கூற்றினையுணராதார், குற்றமில்லாவிடினும் குறைகூறுதல் இயற்கையே யென்பது தோன்ற இயல்பே என்று தேற்றத்திலும் கூறினும். ஓ - எதிர் மறை. ஓரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

நூல்.

பூவடுத்த சோலையினும் பொய்யில்லா ரில்லினும்பூ
மாவடுத்தா ருந்தென் மயிலமே - யாவலொடு
மானதத்தேர் நாட்டனத்தன் வாழ்த்தவளிப் பாகுய்க்கு
மானதத்தேர் நாட்டனத்தன் வாழ்வு.

(இ-ள்.) பூ - புட்பங்கள், அடுத்த - நெருங்கியிருக்கும், சோலையி னும்-சோலைகளிடத்திலும், பூ-அழகிய, மா-மாமரங்களும், தென்-தென்ன மரங்களும், வடுத்து - பிஞ்சுகள் விட்டு, ஆரும் - நிறைந்திருக்குஞ் சிறப் பினையும், பொய் - அசத்தியம், இல்லார் - இல்லாதவர்களுடைய, இல்லி னும் - வீட்டிலும், பூமா - செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமி, அடுத்தாரும்-சேர்ந்திருக்கும், தென்-அழகினையுமுடைய, மயிலமே-மயில மலையே, மானதத்து - மானதவாவியினுடைய, எர் - அழகு விளங்கிய, நாடு-சத்திய லோகத்திலிருக்கும், அனத்தன் - அன்னவாகனத்தையுடைய பிரமதேவன், ஆவலொடு - ஆசையோடு, வாழ்த்த - துதிசெய்ய, வளி-வாயு வாகிய, பாகு - பாகன், உய்க்கும் - செலுத்தும், மானதத்தேர் - மானத மென்னும் இரதத்தில், நாட்டன் - விருப்பத்தை யுடையவரும், அத் தன் - உலக பிதாவானவருமாகிய முருகக் கடவுளுக்கு, வாழ்வு - வாழு மிடமாம், - எ-று.

ஆவலோடு என்னுந் தனிச் சொல்லை, வாழ்த்தவென்னும் வினையெச்சத்தோடு சேர்த்துப் பொருள் கூறப்பட்டது. பொய்யில்லாரில்லினும் பூமா அடித்து ஆரும் என்புழி, இலக்குமி அடித்து வாசஞ்செய்வள் எனப் பொருள்படுதல், நன் - பொது "பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே" என்ற விதிப்படி, பெண்பாலொருமைப்படர்க்கை செய்யுமென் வாய்பாடாயிற்று. "மலர் மேலயன்மானதவாவியினுள்" என்ற கைடதம் அன்னத்தைத் தூதுவிட்டபடலம். 58-ம் செய்யுளின்படி, சத்திய லோகத்தின் மானதவாவியுண்டென அறிக. ஸ்ரீ முருகக் கடவுளுக்கு மானதத்தேரும் வாயுவாகிய சாரதியுமுண்டென்பது, சணிகைப் புராணம் பேரிபூரண நாமப்படலம் "மானதப்பெருந் தேரினை வளி யிறையுய்ப்ப" என்னும் 532-ம் செய்யுளிற் காண்க.

இத்தலை வெண்பாவின் பின்னிரண்டடியும் யமகம்; மேல் வருவனவும் இப்படியே.

பு. அ. பெரியசாமிப் பிள்ளை.

இலக்கணப் பகுதி.

பொருளிலக்கணம்.

செந்தமிழ்ப் பொதியத் திருந்தவமுனிவன் திரிபுமெரித்த விரிசடைப் பரமன்பால் பெற்ற அமுதமுறழ் தமிழ் மொழி இயல் இசை நாடகமென மூப்பாலது. முதன்மைபெற்ற இயற்றமிழ்க்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என ஐந்திலக்கணமுள்ளன. இவற்றுள் நடுநாயகமாயது பொருளிலக்கணம். இப்பொருளிலக்கண உணர்ச்சி ஒன்றே அரிய மானுடப் பிறப்பெய்தினரைப் பெரிய பயனுறச் செய்வது. என்னை எனின் கூறுதும். பொன்னியன் முன்னவன் புத்தேள் பதுமத்தன் படைத்திடு முலகில் எடுக்கும் எப்பிறவியினும் மானுடப் பிறப்பே மேலெனப்படுவது அறம், பொருள், இன்பம், வீடெனும் நான்கும் எய்துதற்குரியதாக இருத்தலானன்றே. மானுடப் பிறப்பெய்தினருள் அறமே பெரிதென்பார் பலர். பொருளே பெரிதென்பார் பற்பலர். இன்

பமே பெரிதென்பார் மிகு பற்பலர். வீடே பெரிதென்பார் பக்கு வம் வாய்ந்த சிலர். பெரிது பெரிதெனப் பேணுவார்க்கும் அறம் பொருளின்பங்களின் பெற்றியும் எடுத்துக்கூறி, அவற்றது நிலையின்மையினையும் அகல உரைத்து வீட்டின் உயர்வைத் துறவறமாகிய காரணவகையாற் றெரித்துப் பெரும்பயனுறச் செய்வது பொருளிலக்கணமே. இது "பொருளாவன அறம் பொருளின் பமும் அவற்றது நிலையின்மையும் அவற்றினீங்கிய வீடுபேறுமாம்" என்னும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் தினிந்திடு சொல்லால் உணர்ந்திடற்பாற்று. இன்னும் இப் பொருளிலக்கண அமைதியை ஆய்ந்திடும் அறிஞர்க்குத் தெள்ளிதின் விளங்கும்.

பொருளிலக்கணம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது வகைப்படுத்தினர் தொல்காப்பியர். இன்பத்திணை அகத்திணையியலிலும் ஏனை மும்பொருள்களையும் புறத்திணையியலிலும் கூறியிருக்கின்றனர். இதனை "கைக்கிளை முதலாப் பெருந்திணை" என்ற சூத்திரத்தின் விசேடவுரையில் "அகத்திணைக்கண் இன்பமும் புறத்திணைக்கண் ஒழிந்த மூன்றுபொருளும் உணர்த்தும்" என நச்சினார்க்கினியர் விதந்தமையான் அறிக. புருஷார்த்தங்களைப் பொருத்துவிப்பது பொருளிலக்கணம் என்பது பெற்றும். ஆதலின் பொருளிலக்கணம் இன்றியமையாது படித்துணர்தல்வேண்டும்.

ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள்.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

உலக மெய்யெனவுளதாம் உள்ளத்தால் விடயங்களையே பற்றி அவற்றை யநித்தங்கண்ட மசுத்தமென வறியாது உண்மை

யை மறந்து திரியும் பேதைமையே யாமென்க, என முன்னங் கூறினுமன்றே!

அறிவதெங்ஙனமெனின் இங்ஙனமாம்: — விசாலமாய இப் பவப் பவ்வத்தின் மாட்டியாதின்பமுளதுகொல்! இவ்வுயிர்க ளுதிப்பது மரிப்பதற்கே மரிப்ப துதிப்பதற்கேயாம், ஆதலின் மிகவுந் துன்பமயமிது. பிறப்பிறப்பிற்றுன்பெனினும் நாப்பண் பல்வள நிகழுஞ் செல்வ நல்குறின் இன்பானுபவம் பம்புறுமெ னின்? உண்மை, செல்வ மல்குமேல்வையினும் மாலை முதலிய யாவையு மின்பம் பயவா, என்னை? நிலையிலாமையின், கைவரா மையின், கைவிடப்படலின் அரந்தையையே பயத்தலினென்க. ஆயினு மயிலுங்கா லானந்த மாகாதோவெனின்? அஞ்ஞான்று மிவை யிடர்க்குழுவேயாகும், அங்ஙனமன்றே: — நூலானுக் காதவை இராகாதி தோடங்களையும் போராபத்துக்களையும் பயக் கும், நுக்கியவையோ பாவங்களைப் பயக்கும். ஆதலின் விஷப் போகம் விஷங்கலந்த தேனைப் பானமாற்றலொக்கும், ஒவ்வலிற் பவப் பவ்வத்தே யின்பின்றென்றுணர்க.

அவை யின்பியாதொழியிற் சுகவேதுவாத லியாங்ஙன மேலுமாலோவெனின்? நவிலுதுங் கேட்டி: யாவுஞ் சலாகைபோல் விரவ தொன்றொடொன்று போகவேதுவென மனுகற்பனை மாத்திரமாய்க் காரிய ஏதுவாய்ச் சிவணி நிற்குமென்க. சுபம்.

(மேலும் வரும்.)

வீர. சு.

நியாயமாலா.

(தொடர்ச்சி.)

4. வனசிம்ஹ நியாயம்: — வனம் - காடு, சிம்ஹம் - ஓர் மிருக விசேஷம், நியாயம் - திருஷ்டாந்தம். இது உடனிகழ்ந்துள்ள இரு வஸ்துக்களுள் ஒன்றன் நாசத்திற்கு மற்றொன்றனிருப்புப் பிரதி பந்தக மாதலிதுபோலவென்கின்றது. அதாவது: சிங்கம் வசிக்கும் ஒரு காட்டை

யழிப்பதற்கச் சிங்கத்தினிருப்பும், அச் சிங்கத்தினை யழிப்பதற்கு அக்காட்டினிருப்புந் தடையாயிருப்பதுபோல வென்பதாம். (சிங்க பயத்தால் காட்டை யணுகமாட்டாமையால் காடழிக்கப்படாமையும், காட்டை யழித்து உட்புகமாட்டாமையால் சிங்கம் கொல்லப்படாமையும் அறிக.) இதனனே இவற்றின் யாதானுமொன்றனை முதற்கண் துணிந்து நாசஞ் செய்யவேண்டுமென்பது பெறப்பட்டது.

5. கதகரேணு நியாயம்: — கதகரேணு - தேற்றாம்பொடி, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒரு வஸ்து தான் ஒன்றனை அடக்கும்போதே தானு மதனுடனடங்கிவிடுத லிதுபோல வென்கின்றது. அதாவது: தேற்றாங்கொட்டைப் பொடியானது அழுக்குள்ள ஜலத்தில் போடப்பட்டால் அவ்வழுக்கினை அந்நீரின் அடிப்பாகத்தில் அமிழ்த்தித் தானும் அவ்வழுக்குடன் அமிழ்ந்துவிடுதல்போல என்பதாம்.

6. சவதகனதண்ட நியாயம்: — சவதகனதண்டம் - பிணஞ்சுடுதடி, நியாயம் - திருஷ்டாந்தம். இது (கதகரேணு நியாயத்தினையே பெரும்பான்மையும் ஒக்கும்.) ஒரு வஸ்துதான் ஒன்றனை நாசமாக்கும் போதே தானு மதனுடன் நாசமுறுத லிதுபோல வென்கின்றது. அதாவது: பிணஞ்சுடு தடியானது தானுமச்சவத்துடன் வேதல்போல வென்பதாம்.

7. சுந்தோபசுந்த நியாயம்: — சுந்தோபசுந்தர் - சுந்தன் உபசுந்தன் எனப் பெயரிய இரு இராக்கத சோதரர், நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒற்றுமையுடையா ரிருவர்க்கு ஒரு வஸ்துவின்கண் அடங்காத சமப்பிரேமையுண்டாயின் அவர் தம்மில் மாறுபட்டழிவதிதுபோல வென்கின்றது. அதாவது: சுந்தன் உபசுந்தன் என்னும் இரு சகோதரர் சமபலசாலிகள். தம்மில் ஒருவரான் மற்றொருவ ரன்றிப் பிறிதொன்றனும் சாகாவரம் பெற்றவர். இதனனே மிக ஐக்கியமுடையாரா யிருந்தனர். இத்தகையார்க்குத் திலோத்தமை என்னுந் தேவமாதின்கண் நானே பெறவேண்டும் நானே பெறவேண்டும் என்று ஒவ்வொருவற்கும் உண்டான அடங்காத சமவிருப்பால் தம்மில் மாறுகொண்டு சண்டையிட்டிரு வரும் ஒருங்கே மாய்ந்தனர் என்பதாம்.

(இன்னும் வரும்.)

வா. மாசிலாமணி முதலியார்

பென்ஷன் சப் இஞ்சனீர்

காஞ்சீபுரம்.

சுஜன சம்வாதம்.

ஒரு நல்ல கப்பல்.

(முன் தொடர்ச்சி.)

கொற்றன். ஆனால் அன்பனே உன் சொரூபம் யாது?

சாத்தன். ஆ! ஈதென்ன விந்தை!! இதோ உமது எதிரிலுள்ள சிரம், மார்பு, கண்டம், கை, கால் முதலியவற்றோடு கூடிய எனது சரீரம் உமக்குக் காணப்படவில்லையா என்ன! இதுதான் என் சொரூபம்.

கொற்றன். (கைகொட்டி நகைத்து) அன்பனே, நீ இப்போது சொல்லிய சொல்லையே சற்று ஊன்றி ஆராய்ந்துபார். எவ்வளவு முரணுறப் பேசுகின்றாய்.

சாத்தன் ஐயா, என்ன முரண் என் வார்த்தையில்?

கொற்றன். அன்ப, " சிரம் முதலியவற்றோடு கூடிய எனது சரீரம் " என்றும், "இதுதான் என் சொரூபம்" என்று சொல்லினை; இது முரணன்றோ!

சாத்தன். எங்ஙனம்?

கொற்றன். எந்தப் பொருள் எனது என்னும் மமதைக்கு விஷயமோ அது தன் சொரூபமாகுமா? திருஷ்டாந்தமாக எனது வீடு, எனது மாடு என்று சொல்லப்படுபவைகள் நமது சொரூபமாகுமா? அதுபோல எனது சரீரம் என உன்னால் சொல்லப்பட்ட இச்சரீரம் நீ யாவையோ? அன்ப, சாவதானமாயூகித்துப்பார்.

சாத்தன். (சற்று ஆலோசிக்கிறான்.)

கொற்றன். அன்ப, ஒன்றும் அவசரமில்லை. நன்றாயாலோசி. எனெனின், நாம் பேசப்புகுந்த விஷயம் மிகப் பெரியது. கடவுள் கிருபையால் இது (இச் சம்பாஷணை) நமது ஜன்மத்தைப் பயனுடையதாக்கும்.

சாத்தன். ஐயனே, தாங்கள் சொல்லியவற்றால் என் மனம் ஏதோ ஒன்றை யறியத் தூண்டப்படுவதா யறிகின்றேன். ஆனால்

அது இன்னதென்று எனக்குள்ளேயே நான் நன்றாயறிய வில்லை. ஆதலா லதை வெளியிடுதற்கு மயங்குகின்றேன். மனம் மிகக் கலக்கமுற்றிருக்கின்றது.

சோற்றன். அன்ப, இக்கலக்கம் நன்மையின் பொருட்டாகுக. கலங்கிய நீர் விரைவில் தெளியுமன்றே.

சாத்தன். ஐயனே கேட்பீராக. உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் இச்சரீர வியவகாரங்களைத் தன் வியவகாரமாகப் பேசுவ தைக் காண்கின்றேன். அங்ஙனமே இச்சரீரத்தை எனது சரீரமென்பதையும் கேட்டிருக்கின்றேன். நானும் ஒரு அவசரத்தில் இச்சரீரத்தை யானென்றும், ஒரு அவசரத்தில் எனது என்றும் வியவகரிக்கின்றேன். ஈதென்ன குழப் பம்!!! ஐயனே இதனை நன்றாய்த் தேவரீர் தெளிவிக்க வேண்டும். இப்போது மற்றொன்றினும் என் சிந்தை நாட வில்லை. இது தெளிந்தாலன்றி எந்த வியவகாரமும் என் னரில் நிகழாதென உண்மையாய் விஜ்ஞாபித்துக் கொள் கின்றேன்.

(வரும்.)

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சீபுரம்.

சுபோத ரத்நாகரம்.

ஒரு நற்புதல்வன்.

ஒரு அறிவுள்ள பிதாவானவன் தன் புதல்வன் தன்னை யெவ் வளவுதான் உபசரிப்பவனாயினும், துஷ்ட நடத்தையுடையவனாயும், கல்வி யறிவில்லாதவனாயு மிருந்தால் அவனிடம் தன் ஆஸ்திகளைக் கொடுப்ப தில்லை.

அதுபோல நிகில லோக பிதாவாகிய கடவுள் தம் புதல்வர்களாகிய ஜீவகோடிக ளுய்திடையும் பொருட்டு வேதாதி கலைகளில் விதித்துள்ள அஹிம்சை, சத்தியம் முதலிய நல்லொழுக்கங்களை நழுவவிட்டுத் தம்மை வழிபடுபவர்களுக்குத் தம் நல்லருட் செல்வத்தை யளிக்கமாட்டார். அன் றியும்,

அப் பிதாவானவன் தன் புதல்வரது தீ யொழுக்கத்தைக் கண்டு அவர்களைத் தண்டிக்குங்கால் அத் துஷ்டப் புதல்வர் தன் (தம்மைத் தண்டிக்கும் பிதாவின்) காலையே கட்டிக்கொண்டு அப்பா, அப்பா வென்று பன்முறை கதறியபோதிலும் அப் புதல்வர் தீ யொழுக்கத்தினின்றும் விலகும்வரையில் தண்டித்தே வருவான்.

அதுபோலச் சர்வ லோக பிதாவாகிய பரமேஸ்வரனும் தம் புதல்வராகிய ஆன்மகோடிகள், தமசாஞ்ஞா ரூப வேதாந்த கலைகளில் நிஷேதிக்கப்பட்டுள்ள தீ யொழுக்கங்களைக்கொண் டொழுகுதலைக் கண்டு, அவரவர் அபராதத்துக் கேற்ப, வறுமையாதிகளைக் கொடுத்துத் தண்டிக்கும் போது அத் தீ யொழுக்கமுடையார், தம்மை (கடவுளை) நோக்கி எவ்வளவுதான் வழிபாடியற்றினும் வறுமையாதி தண்டனைகளைச் செய்யாது விடுவதில்லை.

ஆதலின் நம் பரம பிதாவாகிய பரமேஸ்வரனிடத்துள்ள நல்லருட் செல்வமாகிய ஆஸ்திகையைப் பெறும்பொருட்டு, அவரால் சாஸ்திர ரூபமாய் வெளியிடப்பட்டுள்ள ஆஞ்ஞையின்படி நல்லொழுக்கங்களைத் திரிகரண சுத்தியா யனுஷ்டிப்பவனே ஒரு நற்புதல்வன்.

(இன்னும் வரும்.)

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சிபுரம்.

சமாசாரக் குறிப்பு.

புதிதாக நியமிக்கப்பட்ட பிரெஞ்சு குடியரசுத் தலைவர்.

1913-ம் ஆ ஜனவரி ம 17-ம் உ பரீஸைச் சார்ந்த வெர்சேய்ல் நகரத்தில், தெப்புய்த்தே கூட்டமும் சேனத்தோர் கூட்டமும் ஒன்று கூடிய காங்க்ரெஸ் என்னும் மகா சபையால், பிராஞ்சு தேசத்து மந்திரி லோசனைச் சபையின் அக்கிராசனாதிபதியாகிய " ரெய்மோன் புவேன்கரெ " (M. Raymond Poincaré) என்பவர், பிராஞ்சு தேசத்துக் குடியரசுத் தலைவராக ஏழு வருஷத்திற்கு நியமிக்கப்பட்டார்.

புதுவை.

ஆச்சரியத்திற்குரிய சரீரப் பயிற்சி.

1913-ம் ஆ ஜனவரி மீ 26-ம் உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு, புதுவை பெத்திசெமினேரில், இந்து அத்லெத்திக் கிளப் திரெக்தேர் " சாம்சன் எஸ். ராயன் " என்னும் இந்து வாலிபர், நூற்றுக் கணக்கான பாரமுள்ள இருப்புக்குண்டுகளைத் தூக்கியும், ½ அங்குல கனமும் S. வடிவுள்ளதுமான இருப்புச் சங்கிலியை அநாயாஸமாக அறுத்தும், மார்பில் இறுகக்கட்டிய சங்கிலியை யெளிதி லவிழ்த்தெறிந்தும், 3000 பவுண்ட் பாரமுள்ள ஒரு பெரிய கருங்கல்லைத் தமது முதுகின் மீதும் மார்பின் மீதும் ஏற்றி அதன்மேல் வேறு கல்லைவைத்து அதைச் சம்மட்டியால் அடித்து உடைக்கச்செய்தும், அக்கல்லின்மேல் சிலரை ஏறி நிற்கச்செய்தும், நிறைய மனிதர் ஏறிய இரண்டு கட்டைவண்டிகளைத் தம் முடம்பின்மே லிழுக்கச்செய்தும் தமது சரீரப் பயிற்சியின் பலத்தைக் காட்டினது யாவர்க்கும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணிவிட்டது.

புதுவைக் கல்வே காலேஜில் வாசித்த மாணவரி லொருவரும், 20 வயதுள்ளவருமான இவர் தம் சரீரப் பயிற்சியை இன்னும் விருத்தி செய்து தமது சாமர்த்தியத்தைக்காட்டி எங்கும் புகழ்பெறுவாரென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாலிபர்க்கு " புதுவை பாலபீமன் " என்று நாம் பெயர் கொடுக்கின்றோம்.

ஜி. வி. போஸ் என்னும் இந்து சாஸ்திரி புதிதாகக் கண்டுபிடித்த அற்புதங்கள்.

கல்கத்தா வாசியாகிய ப்ரொபஸர் ஜி. வி. போஸ் என்பவர் அநேக அரியபெரிய விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறாரென்பது உலகமறிந்த விஷயம்.

அவர் கடைசியாகப் புல் பூண்டுகளின் உணர்ச்சி வளர்ச்சிகளைப் பற்றிய அற்புதங்களைக் கண்டுபிடித்துள்ளார்.

கல்கத்தாவில் 17-1-13-ல் கவர்னர் முதலிய கனவான்கள் நிறைந்த மகாசபையில், தமது சுய முயற்சியினால் தாமே கண்டுபிடித்த கருவிகளின் உதவியினால் புல் பூண்டுகளின் உணர்ச்சியையும் வளர்ச்சியையும் அங்குக் கூடியிருந்தவர்களனைவரும் பிரத்தியக்ஷமாக அறிந்து வியக்கும்படி காட்டியிருக்கிறார். எங்ஙனமெனின், அவர் கண்டுபிடித்த கருவிகளினருகில் புல் பூண்டுகளை வைத்தால் அக்கருவிகளின் சக்தியால் அவைகள் சிற்சில குறிகளை வெளிப்படுத்துகின்றனவாம். பல நாளைய அநுபவத்தால் அக்

குறிகளின் கருத்தை அறியக் கூடுமாயிருக்கிறதாம். ஆகவே புல் பூண்டுகளிடத்தில் நாம் சம்பாஷிப்பதுபோலாய்விட்டது.

பூண்டுகளை விஷத்தை யுட்கொள்ளும்படி செய்தால் அப்பூண்டுகள் அடைகிற மரணவஸ்தையை அக்கருவிகள் உணரும்படி செய்கின்றனவாம். சாராயத்தை யுட்கொள்ளும்படி செய்தால் அவை குடிமயக்கத்தாலடைகிற தன்மைகளையெல்லாந் தெரிவிக்கின்றனவாம். வேறு சில கருவிகள் புல் பூண்டுகள் க்ஷணத்துக்கு க்ஷணம் வளர்கிற விதத்தைக் கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாகக் காட்டுகின்றனவாம்.

இதனால் தாவர வர்க்கங்கள் சம்பந்தமாகப் பின்னும் எவ்வளவோ பெரு நன்மைகள் விளையுமென்பதற்குத் தடையென்ன!

காஞ்சீபுரம்.

சைவசித்தாந்த மகா சமாஜம்:—இந்தச் சமாஜமானது 27-12-12 முதல் 3 நாள் நடைபெற்றது. இதில் 31 உபந்நியாசங்கள் நடைபெற்றன. சமாஜமானது மிக்க குதூகலத்துடன் மிக மேன்மையாகவும், கம்பீரமாகவும் நடைபெற்றது. ஸ்ரீமாந் ஜெ. யம். நல்லசாமிப்பிள்ளையவர்கள், அம்பாசமுத்திரம் ஸ்ரீமாந் காந்திமதிநாதப்பிள்ளையவர்கள், காக்கைக்குடி ஸ்ரீ[illegible]பிள்ளையவர்கள் முதலிய வித்வன்மணிகளால மகோபந்நியாசங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் என்னும் ஒரு பெண்மணியும் பெரியதோர் உபந்நியாசஞ் செய்தனர். இச்சமாஜத்தை மிகக் கௌரவமாய் வரவேற்று நடைபெறச் செய்தவர், ஸ்ரீமாந் ஜமீன்தார் கா. மு. சுப்பராய முதலியாரவர்கள். (ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில் தருமகர்த்தா.) இவரே இச்சமாஜச் செலவுகளைப் பெரும்பான்மையும் வகித்தார். கனம் வி. செ. முருகேச முதலியார், கனம் பொன்னுசாமி முதலியார் என்னும் இவர்கள் இச்சமாஜம் இங்கு நடைபெறுவதற்குப் பெரிதும் முயன்றவர். இவர்களது உதவியால் நடந்த இந்த மகா சமாஜம் இக்காஞ்சீபுரத்தில் சிறப்புற்றிலகியது.

ஸ்ரீ நிச்சல இராமாநந்தாச்சிரமத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள திருவருட்பிரகாச சபையில் சில வாரங்களாகப் பிரதி புதன்கிழமையிலும் இளையனார்வேலூர் ஸ்ரீமது வி. முருகேச முதலியாரவர்களால் தத்துவாநுசந்தானம் என்னும் உத்தம வேதாந்த கிரந்தபாடம் நடத்தப்பட்டு வருகின்றது. அநேக ஜிஞ்ஞாசையுடையார் மிகச் சிரத்தையுடன் சிரவணம் செய்துவருகின்றனர்.

கவனிப்பு:—நமது கலைமகளின் காஞ்சீபுரத்துச் சந்தாநேயர்கள், ஸ்ரீமாந் ஆ. வடிவேலு செட்டியாரவர்களிடம் தமது சந்தாவைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ப. ர்.

வேண்டுகோள்.

இக் கலைமகள் பத்திரிகையைப் பெறுதற்குத் தக்கவ ரென்று நினைத்துச் சில கனவான்கட்கு முதற் சஞ்சிகையை அனுப்பியுள்ளோம். அவர்களும் அதனை யன்போடேற்று அதற் குரிய ஒரு வருஷச் சந்தாவை அனுப்புவார்க ளென்று பெரிதும் நம்புகின்றோம்.

பத்திரிகை வேண்டாதவர்கள் தயைகூர்ந்து உடனே தெரி வித்துவிடில் எமக்கு நஷ்டமுண்டுபண்ணுதவர்களாகக் கருதப்படு வார்கள்.

விஷயதானம் செய்ய விரும்புவோர் ஒரே பக்கத்தில் திருத்தமாகச் செந்தமிழ் நடையில் புதிதாக எற்பட்டுள்ள பத்தி ரிகை விதியை யனுசரித்து எழுதியனுப்ப வேண்டுகின்றோம். மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி யனுப்பப்படமாட்டா.

இராஜதந்திரம் மததூஷணம் முதலிய விஷயங்களையும் நிந்தைக்குரிய மற்றெந்த விஷயங்களையும் நமது கலைமகள் தன தங்கத்திலணியச் சிறிதும் விரும்பாள்.

நமது கலைமகளை யனுப்பப் பெறும் மற்றப் பத்திராதிபர்க ளும் மாற்றுப் பத்திரிகையாகத் தத்தம் பத்திரிகையை எமக் கனுப்பி அன்பு பாராட்டுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம் சி. பங்காரு
பத்திராதிபன், புதுவை.

விளம்பரம்.

இந்தியாவின் தத்துவஞானம்.

பிரம்மஸ்ரீ ஜீ. ஸீ. ஷட்டோஜீ அவர்களால் ப்ருய்க்ஸெல் நகரத்தில் 1898-ம் ஆண்டில் பிராஞ்சுப்பாஷையில் உபந்யஸிக்கப் பட்டது. புதுவை பிரமஞ்ஞான சபை அங்கத்தினரும் பொதுவேலை கள் ஒவர்சியருமாகிய வே. கு. அநந்தநாயக நாயகரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

டபிள் க்ரவன் சயிஜில் (1 இ 16) 12½ பாரம் (200 பக்கம்) கொண்ட புத்தகம் 1 இ விலை அணா 6. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதி வி. பி. மூல மாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், "ஸ்ரீக்ருஷ்ணை" வாசகசாலை
சி காளத்தீசர் கோயில் வீதி, புதுச்சேரி.

அறிவிப்பு.

கலைமகள்.

'கலைமகள்' என்னும் பெயரிய இப் பத்திரிகை கல்வி, அறிவு, ஒழுக்கம், இலக்கியம், இலக்கணம், தர்க்கம், பக்தி, ஞானம் முதலிய இன்றியமையாத பல விஷயங்கள் தக்கவர்களா லெழுதப் பெற்று மாதந்தோறும் வெளிவரும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளும், வேதாந்த பாஸ்கர் கோயிலூர் ஸ்ரீமத் வீர – சுப்பைய சுவாமிகளும் இதற்கு விஷயதானம் செய்துவருவதாக வாக்களித்தருளியுள்ளார்கள்.

இது அதிக பொருட் செலவிற் பிரசுரிக்கப்படினும், தமிழ் வளர்ச்சி கருதி, மிகக் குறைந்த விலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இதனைப் பெற விரும்புவோர் பத்திராதிபருக் கெழுதி வி. பி. தபால்மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். முற்பண மனுப்புவோர்க்கே பத்திரிகை யனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

	ரூ. அ. ப.
ஒரு பக்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு ...	2 – 0 – 0
அரைப் பக்கத்திற்கு ,, ...	1 – 4 – 0
கால் பக்கத்திற்கு ,, ...	0 – 8 – 0

பத்திராதிபர்.